**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 89/2020** |
| Preliminary Register | .. | .. | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW5** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயகணேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரிகள் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **4th day of November 2025.**

முதல் விசாரணை **:** நான் P.புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.05.2020 ம் தேதி இரவு சுமார் 7.15 மணிக்கு நானும், கருப்பசாமி என்பவரும் அவரது வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்த போது, போலிசார்

வந்து சம்பவம் நடந்ததை கேட்டு நான் ஆனந்த் என்பவர் வீட்டை அடையாளம் காட்டினேன். அங்கு வைத்து போலிசார் எழுதிகொண்டு படம் வரைந்தார்கள். போலிசார் தயார் செய்த மகஜரில் நானும், கருப்பசாமியும் கையொப்பம் செய்தோம். பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜர் அ.த.சா.ஆ.**2.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள் என்றால் - P.புதுப்பட்டி கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராவேன். போலிசார் சம்பவதினத்தன்று உங்களை எவ்வாறு வீட்டை அடையாளம் காண்பிக்க சொல்லி அழைத்தார்கள் என்றால் - நான் மந்தையில் நின்று பேசிக்கொண்டிருந்தேன் அப்போது போலிசார் வந்து என்னை அடையாளம் காண்பிக்க சொல்லி அழைத்தார்கள். நீங்கள் மந்தையில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலிசார் உங்களை கூப்பிட்டார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்றால்- ஆம். நீங்கள் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் - அரைமணி நேரம் நின்றிருப்பேன். நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் யார் யார் வீடு எங்கு எங்கு உள்ளது என்ற விவரம் உங்களுக்கு தற்போது தெரியுமா என்றாலும், அதனை விளக்கி சொல்ல இயலுமா என்றால் - இயலும். எத்தனை கையொப்பம் போட்டீர்கள் என்றால் - நான் ஒரு கையொப்பம் போட்டேன். போலிசார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் - இரண்டு பேர் வந்தார்கள., அது யார் யார் என்று தெரியுமா என்றால் - அதில் ஒருவர் பெயர் பஞ்சாசரம். ஆய்வாளர் வந்தாரா இல்லையா என்று தெரியுமா என்றால் - தெரியாது. நீங்கள் கையொப்பம் போட்டதில் மின்கம்பம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - ஆம். அதில் என்ன எழுதியுள்ளது என்று தெரியுமா என்றால் - தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் சம்மன் மற்றும் அ.த.சா.ஆ.2 ஆவணமான பார்வைமகஜரில் உள்ள முதல் கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் - இரண்டும் என்னுடைய கையொப்பம்தான், வித்தியாசம் எனக்கு தெரியவில்லை.

வித்தியாசம் இருப்பதாக உங்களுக்கு தெரிகிறதா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை. G என்ற எழுத்தில் வித்தியாசம் உள்ளது என்றால் - சரிதான். ஒரே மாதிரி உங்களை கையொப்பம் இட சொன்னால் உங்களால் போட முடியாது என்றுசொன்னால் - சரிதான். நீங்கள் சம்பவசமயத்தில் என்னை வேலை செய்தீர்கள் என்றால் - சும்மாதான் இருந்தேன். நீங்கள் முதல்விசாரணையில் சொன்னமாதிரி, சொன்னஇடத்தில் சொல்லவில்லை என்றும், கையொப்பமிடவில்லை என்றுசொன்னால் - சரியல்ல. நீங்கள் ஊராட்சி மன்ற தலைவர் என்பதனால் போலிசார் கேட்டுக்கொண்டதன்கிணங்க பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் - சரியல்ல. உங்கள் முன்னால் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றுசொன்னால் - சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**